விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 17 ஸபர் 16 இதழ் 293

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3—12—82

காங்கேசன்துறை கொலைச் சம்பவம்:

## பாதுகாப்பு அதிகாரிகளை திருப்பி அனுப்பக்கோரிக்கை!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இடம்பெற்ற கொலைச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டிருந்த பரபரப்பான சூழ்நிலை தற்போது சுமுக நிலைக்குத் திரும்பியுள்ளது.

சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்டடத்திலுள்ள உத்தியோகத்தர் விடுதியில் வைத்து தொழிற்சாலை பொறியியலாளரான டபிள்யூ ரி ராஜ்குமார் என்பவர் கத்தியால குத்திக்கொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இச்சம்பவத்தையடுத்து சிமெந்து தொழிற்சாலைப் பகுதியில் பதட்டநிலை உருவாகியிருந்த போதும் தற்போது நிலைமை சீராகியுள்ளது. தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கிறார்கள்.

தொழிற்சாலை வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. சம்பவத்திற்கு மறுநாள் தொழிலாளரை வேலைசெய்யது வீடு செல்லுமாறு கோரப்பட்டிருந்த போதும் அன்றைய சம்பளம் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தாக்குதலுக்கிலக்கான பாதுகாவல் உத்தியோகத்தர்கள் சிலர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சிறு காயங்களுடன் சிகிச்சை பெறுகின்றனர். ஏனைய பலர் லீவில் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இங்கு கடமை புரியும் சகல சிங்கள பாதுகாவல் உத்தியோகத்தர்களையும் இங்கிருந்து அனுப்பிவிட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் தொடர்ச்சி

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் 'மர்மமனிதன்' நடமாட்டம்

# இரவில் மக்கள் பீதி

## எம்.பிக்கு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம், கச்சாய், அல்லாரைப் பகுதிகளில் கடந்த மூன்று வாரங்களாக மக்களுக்குப் பெரும் பீதியை ஏற்படுத்திவரும 'மர்ம மனிதன்' எனச் சந்தேகிக்கும் விகாரமான தோற்றத்தை உடைய குரங்குமுக மனிதனை காட்டுப்பகுதியில் நேற்று இளைஞர்கள் வளைத்துப் பிடித்து விசாரணை செய்தபோது அவர் மர்ம மனிதனல்ல என்பது தெரியவந்துள்ளது.

கருநிறமேனியுடன் கட்டையான உருவம் கொண்ட மர்ம மனிதன் உடலெல்லாம் எண்ணெய்வழியும் கோலத்துடன் நள்ளிரவு நேரத்தில் நடமாடுவதாகக் கூறப்படுவதால் இப்பகுதிகளில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

இம்மர்மமனிதன் இரவில் வீடுகளுக்கு சென்று பெண்களை தூக்கிச்செல்லதாக கூறப்பட்டதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்குப் பின்னர் பெண்கள் வெளியில் நடமாடுவதில்லை.

கிராம ரீதியில் இளைஞர்கள் தொண்டர்படை அமைத்து இந்த மர்மமனிதனை பிடிக்க இரவில் ரோந்து சுற்றி வருகின்றனர்.

ஒருசமயம் இந்த மர்ம மனிதனைப் 3 இளைஞர்கள் பிடித்தபோது மூவரையும், தாக்கிவிட்டு அந்த மனிதன் தப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த மனிதனால் கடுமையாகத் தாக்கப்பட்ட இரு பெண்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட வேறுசில பெண்கள், வெட்கத்தினால் எதனையும் வெளியில் சொல்லாமல், ரகசியமாக சிகிச்சை பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

தனியாக படுத்திருக்கும் பெண்களை, அவர்களுக்கு தெரியாமலே, மயக்கமடையச் செய்து, அயல் வளவிற்கு தூக்கிச்சென்று உடலில் காயங்கள் ஏற்படுத்திவிட்டு அந்த மர்ம மனிதன் தப்பிவிடுகிறானாம்.

வயோதிபப்பெண் ஒருவர் அவரின் வீட்டிற்கு அருகில்

(8-ம் பக்கம் பார்க்க)

## லஞ்சப் புகார் மீது ரூ.5,000 பிணையில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

லஞ்சப் புகார் தொடர்பாக கைது செய்யப்பட்ட யாழ்.சிறைசாலை ஜெயிலர் ஒருவர் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

1 500 ரூபா லஞ்சமாகப் பெற்றார் என்ற புகாரின் பேரில் சிறைச்சாலை ஜெயிலரான ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் ரி ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபர் சாரபில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் சட்டத்தரணிகளான பி.

(8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ்ஈழப் பகுதியின் பொருளாதாரத்தை வளர்க்க வழிகாணுங்கள்!"

### கருத்தரங்கில் 'அமிர்' கருத்து

[கொழும்பு]

"ஜனநாயக உரிமைகள் எனும் வீட்டுக்கு தீவைக்கப்படும் நிலை, இந்த நாட்டில் இருக்கிறது சிங்கள மக்கள் இந்த 'வீட்டி'லிருந்து தப்பிவிடலாம் தமிழீழ மக்களாகிய நாம் அந்த வீட்டில் அடிமைகளாகப் பூட்டி வைக்கப்பட்டுள்ளோம், நிச்சயம் நாமும் வீட்டுடன் சேர்ந்து சாம்பலாகிவிடுவோம்' என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் தான் திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கருத்தரங்கிற்கு திரு எஸ். நவரத்தினம் கரிகாலன்] தலைமை வகித்தார் திரு அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"நமது இலட்சியம் நோக்கி நாம் சில நடவடிக்கைகளில் இறங்கும் போது தமிழீழத்துக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் அவ்வவ் பகுதிகளில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு இன்னல்களுக்குள்ளாகின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.

"வெளிமாவட்டங்களில் வாழும் தமிழ்மக்கள் எமது பகுதிகளில் வழ வழிசெய்ய வேண்டும். ஆனால் இதற்குப் பொருளாதாரம் குறுக்கே நிற்கிறது.

"பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை மனதில் கொண்டு, எமது மண்ணில் பொருளாதாரத்தை வளர்க்க வழிகாண வேண்டும்.

"பிரதேசசபை அமைத்து, எமது மண்ணில் எமது பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்க சிங்களக்கட்சிகள் முன்னர் இணங்கவில்லை. ஆனாலும் பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் இதனைச் செயல்படுத்த முனைந்தபோது, ஒப்பந்தமே கழித்தெறியப்பட்டது!

"1977 மார்ச்சில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பீலிக்ஸிடமிருந்து பேச்சுவார்த்தைக்கு அழைப்பு வந்தது. பண்டா-செல்வா ஒப்பந்த அடிப்படையில் இப்பேச்சுக்கள் அமையவேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். இதற்கு இணக்கம் தெரிவித்தார்கள் ஆனால் தந்தை செல்வா மரணப்படுக்கையில் இருந்ததால் இதுகுறித்து அதிகமாக கவனம் செலுத்தவில்லை" என்றார்.

## சர்வோதய சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாண சர்வோதய இயக்கத்தினரால் 01-12-82 அன்று மாலை 7மணிக்கு மாதகல் மேற்கு சர்வோதய நிலையத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 6-வது சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்கள் பரிசுக்குரியவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன

1-ம் பரிசு: 13176

(ரொக்கம் ரூபா 10,000)

2-ம் பரிசு: 14256

(8 1/2 சுற்று மாட்டு வண்டில்)

3-ம் பரிசு: 16441

(சிறுவர் துவிச்சக்கர வண்டி)

ரூபா 250/- பெறுமதிகொண்ட ஏழு ஆறுதல் பரிசுகள்;

| | | | |
|---|---|---|---|
| 02420 | 02035 | 09322 | 15273 |
| 03460 | 12809 | 05891 | |

★ மூன்று மாதங்களுக்குள் பரிசு கோரப்படாவிடில் பரிசுச் சீட்டு செல்லுபடியற்றதாகும்.

5344

## காலநிலை சீர்கேடு

[யாழ்ப்பாணம்]

மன்னாரிலிருந்து மட்டக்களப்புவரை கரையோரப் பகுதிகளில் இன்று கடல் கொந்தளிப்பும், பலத்த காற்றும் வீசுமென்று வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இன்று நண்பகல் வரை காலநிலை சீரற்றுக்காணப்படுவதால் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டாமென்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

வானிலை அவதானிலைய யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா விற்கு அறிவித்ததை தொடர்ந்து அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் லண்டன் ICMA

பரீட்சைக்குரிய வகுப்புகள்

11-12-82 முதல் ஆரம்பம்

★ பாட விபரங்கள்:

FOUNDATION A:

FINANCIAL ACCOUNTING I

COST ACCOUNTING I

PART–I: COST ACCOUNTING–2

விரிவுரையாளர்: ஆர். சிவகுமாரன்

4-12-82 முதல் பதிவு செய்துகொள்ளலாம்.

விசாரணைகளுக்கும் பதிவுசெய்வதற்கும்

குமரன் டூரிஸ்ட் இன்

67, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23753

கவனிக்கவும்: எல்லா விரிவுரைகளும் சனி, ஞாயிறு நாட்களில் மட்டுமே நடைபெறும்.

5351

# வரி விளம்பரம்

## தேவை

கைத்தறியில் நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11. பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (5299)

## வகுப்புக்கள்

Scientific Cutting Short Eats, Cake Icing and Decoration Hair Style and Beauty Treatment ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்புக்களில் சேரவிரும்புவோர் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்புகொள்ளவும். (குறுகியகால வகுப்புக்களுமுண்டு), நிர்வாகி. The Ladie's Academy இல 4, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக), யாழ்ப்பாணம். 5262

## விற்பனைக்கு

யாழ். நாவலர் வீதி, முதலியார் ஒழுங்கை 5-ம் இலக்கத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 71/1, ஸ்ரேசன் ரேட், யாழ்ப்பாணம். (5341)

மல்லாகம் சந்தி, புகையிரத நிலையம், காங்கேசன்துறை வீதி ஆகியவற்றிற்கு அருகாமையில் வீடுகட்டுவதற்குஏற்ற நாலரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: த செல்லத்துரை, தொந்தனை ஒழுங்கை, மல்லாகம். (5340)

3 பரப்பு வளவும், புதிய வீடும் சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. முத்துக்குமாரசாமிக்குருக்கள், உயரப்புலம், ஆனைக்கோட்டை. கணேசா மில்லுக்கு அருகாமையில் நேரடி தொடர்புகொள்ளவும். (5347)


## முதலாண்டு நினைவஞ்சலி



திருமதி
மா. சந்திரலேகா
தோற்றம்: 15-6-1953
மறைவு: 28-11-1981

எங்கள் அன்பின் சோதியோ அருள் விளக்கோ நீஅணைந்தாலும் நின் அன்பு விளக்கு என்றும் எம் இதயத்தில் எரிந்து கொண்டிருக்கும். உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

கணவன், உற்றுர், உறவினர், மாதவராசா குடும்பத்தினர்.
சந்நிதி.
தொண்டமானாறு.
2-12-82 (5338)



சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்ட மதகுருமார் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆகியோரை விடுதலை செய்யக்கோரியும் மற்றும் 4 அம்சக்கோரிக்கையை முன்வைத்தும் கொட்டும் மழையில் நடாத்தப்பட்ட முழுநாள் உண்ணுவிரதத்தின்போது எடுக்கப்பட்ட படம். படம்: பண்டத்தரிப்பு நிருபர்.


# தொழில் வாய்ப்புக்கள்

ஐக்கிய குடும்பங்கள் ஸ்தாபனத்தின் ஆதரவில் இயங்கும்

தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தொழில் அனுபவமும் நல்லொழுக்கமும் உள்ளவர்கள் தேவை

1. மரத்தளபாடம் செய்யும் மெஷின்களை இயக்கவும் தளபாடம் செய்யவும் தெரிந்த பரம்பரைத் தச்சர்கள் —10 வருட அனுபவம்
2. மரக்கடைச்சல் தொழிலாளர்கள் — 10 வருட அனுபவம்
3. மரத்தளபாடம்செய்யும் பரம்பரைத் தச்சர்கள் — 10 வருட அனுபவம்
4 கட்டடத் தொழில் செய்யும் தச்சர்கள் — 10 வருட அனுபவம்
5. மேசன் — 10 வருட அனுபவம்
6. தச்சுவேலை, மேசன் வேலைக்குரிய கூலியாட்கள் — 2 வருட அனுபவம்
7. ஒட்டுனர்கள் (எலெக்றிக் வெல்டிங்) — 10 வருட அனுபவம்
8. ஒட்டுனர்கள் (காஸ் வெல்டிங்) — 10 வருட அனுபவம்
9. உருக்கு அலுமாரி செய்வோர் — 10 வருட அனுபவம்
10. இரும்புப் பூட்டு, பித்தளை, உருக்குவேலை செய்வோர்— 10 வருட அனுபவம்
11. த ர வேலையாட்கள் (ரிங்கர்) — 10 வருட அனுபவம்
12. கதிரை பின்னுவோர் — 10 வருட அனுபவம்
13. கட்டடவேலை, மரத்தளபாட வேலை, இரும்பு ஒட்டுவேலை பயிலுனர்—

காலை 9 மணிக்குப் பிந்தாமல்
நேரில் வரவேண்டிய முகவரி :

யூனிபோ இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
பலாலிவீதி, உரும்பிராய்.

நேரில் வரமுடியாதவர்கள்
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி :

யூனிபோ இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
11சி, மொம்சாக் மாளிகை (மேல்மாடி)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்து கலவையாளர்கள் சங்க யாழ் மாவட்டக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 5-ம் திகதி ஞாயிறு யாழ். நகரிலுள்ள ஹோட்டல் பாரடைஸ் மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

கிளைத்தலைவர் திரு. இ வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தாய்ச் சங்க பொதுச் செயலாளர் திரு ரி பி. விக்கிரமசிங்கா பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.


MOOLAI
CO-OPERATIVE
HOSPITAL SOCIETY
LTD.,
CHULIPURAM.

WANTED

Trainees :- Male
1 Dispensers: with chemistry in Advance-Level English in G C E (O.L)
2. Attendant: with 8th std

Apply on or before 20th December 1982.
5339 President


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

## பண்ணை மீன்சந்தை குத்தகை - 1983

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பண்ணை மீன்சந்தை 1983-ம் ஆண்டு குத்தகைக்கான கேள்விகள் மாநகராட்சி மன்ற ஆணையாளரினால் 16-12-82 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள், பிணைப்பணம் ரூபா 500/-ம், கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 50/-ம் செலுத்தி மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் 15-12-82 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள், ஏனைய விபரங்கள் யாழ், மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்
யாழ்ப்பாணம்,
01-12-1982. (5346)

## கூட்டுறவுத் தந்தை நினைவு தினம்

(பண்டத்தரிப்பு)

கூட்டுறவுத் தந்தை அமரர்: வீரசிங்கத்தின் நினைவு தினம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவரும், கோப்பாய் தொகுதி எம்பியுமான திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நினைவு தின விழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ் ஞானபிரகாசம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## இல்லச்சுடரொளியின் ஓராண்டு நினைவாஞ்சலி



கி. றெம்பட் பங்கிறுஸ்

தோற்றம்: 21-08-1949
மறைவு: 03-12-1981

அன்பென்னும் ஒளி விளக்கே, எம் அருட்பெரும் சுடரே மங்காத செல்வமே, மாசில்லா மாணிக்கமே, நகர் காவலர் இலாகாதனில் ஒன்பதாண்டு சேவையினை முத்துக்கு வித்தாக நீ பணி புரிந்து பாரோர் புகழ பொன்னென சேவைதனை நேர்மையுடன் ஆற்றி, கண்ணிர நாம் காண்கையிலே பொல்லாப் புற்று நோயால் பீடித்துயிர் துறந்தனையோ, மின்னல் ஒளிபோல் ஓராண்டு மறைந்ததையா! தித்திக்கும் தேன் குரல் தான் எம் செவிதனில் பாயுதடா, ஆருத் துயர்தனிலே மூழ்கடித்து மீளாத் துயில் கொண்டனையோ!

''இரக்கமுள்ள தயாபர யேசுவே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். முடிவில்லாத பிரகாசம் இவர்மேல் பிரகாசிக்கக் கடவது''

''சமாதானத்தில் இளைப்பாறுவாராக''

இவரின் பிரிவால் துயரும்
பெற்றேர்,
சகோதரர்,
உற்றுர், உறவினர்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

இவரின் ஆன்ம சாந்திக்காக இன்று மாலை 5-00மணிக்கு சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திவ்விய பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்படும். தவருது சமூகங் கொடுத்து இவரின் ஆன்ம சாந்திக்காக மன்ருடவும். 5348)

# பாகிஸ்தான் ஆசிய ஹாக்கி சாம்பியனானது

## இந்தியா படுதோல்வி!

புதுடில்லி, டிச 2

'ஜவஹர்லால் நேரு' விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற 'ஆசியாட்' ஹாக்கி இறுதிப் பந்தயத்தில் பாகிஸ்தான் ஏழு கோல்களைப் போட்டு சாம்பியன் பட்டத்தைப்பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றது.

இந்தியா ஒரு கோலைமட்டுமே அடித்து இரண்டாமிடத்துக்கான வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றது ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மத்தியில் மிக விறுவிறுப்பாக இந்த ஹாக்கிப் பந்தயம் நடைபெற்றது. இந்திய அணிக்கு கோல்களை அடிக்கும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதிலும் அது அவற்றை நழுவ விட்டுவிட்டது.

பாகிஸ்தான் அணியின் கோல்காப்பாளரும், பின்னணியில் விளையாடும் தடுப்பு ஆட்டக்காரர்களும் தமது வலயத்தினுள் இந்திய வீரர்கள் ஊடுருவமுடியாதவகையில் திறம்பட இயங்கினர்.

1978ம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற 'ஆசியாட்' ஹொக்கிப் போட்டியிலும் பாகிஸ்தானே சாம்பியனானது என்பது குறிப்பிடத்தக்கது. அப்போட்டியிலும் இந்தியா இரண்டாமிடத்தையே பெற்றது பாகிஸ்தானிய அணியினர் உலக ஹாக்கி சாம்பியன்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின்பிரபல ஹாக்கி வீரரும், ஒலிம்பிக் பந்தயங்களில் இந்திய அணி சார்பில் விளையாடியவருமான பீட்டர் என்ற வீரர் நேற்றைய ஆட்டம் பற்றித் தெரிவிக்கையில், பாகிஸ்தானிய அணியினரின் ஆட்டம் அபாரமானதென்றும் அவர்கள் தமக்குக் கிடைத்த கோல்போடும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தினரென்றும் குறிப்பிட்டார்.

'ஆசியாட்' ஹாக்கிப் பந்தயத்தில் மூன்றுவதிடத்தை மலேஷியாபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது. ஜப்பானிய அணியையே மலேஷிய அணி மூன்றுமிடத்துக்காகச் சந்தித்தது

'ஆசியாட்' பந்தயங்களில் இதுவரை 487 பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப் பந்தயங்களுக்கெனஒதுக்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை 1381 ஆகும். சீனாவே பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடம் வகிக்கின்றது. நேற்றுவரை 54 தங்கப் பதக்கங்களுடன் 138 பதக்கங்களை இது பெற்றது ஜப்பான் 53 தங்கப் பதக்களுடன் 132 பதக்கங்களைப்பெற்றது.

இந்தியா 11 தங்கப் பதங்கங்களுடன் மொத்தம் 39 பதக்கங்களைப்பெற்று நான்காவதிடத்திலேயே தொடர்ந்திருக்கின்றது.

இந்தியாவுக்கு பதக்கங்களை அதிகரித்துக்கொள்ளும் வாய்ப்புக்கள் தொடர்ந்தும இருந்து கொண்டேவருகின்றது. மூன்று [illegible]த்துச்சண்டைப் போட்டிப் பிரிவுகளில் இந்தியா இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகியுள்ளது இத்துடன் மல்யுத்தப் போட்டிகளில் இறுதிக்கட்டத்துக்கும் இருவர் பிரவேசித்துள்ளனர். இப்போட்டிகளில் இந்தியா முன்னணியில் விளங்கும் எனஎதிர் பார்க்கப்படுகின்றது.

'ஆசியாட்' உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் குவைத்தும், ஈராக்கும்மோதவிருக்கின்றன. நேற்றுக்காலை 'ஆசியாட்' பந்தயங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நடக்கும் போட்டி இடம்பெற்றது. இப் போட்டியில் சீனவைச்சேர்ந்த வீரர்கள் இருவர் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர். ஜப்பான் மூன்றுமிடத்தைப்பெற்றது. இந் நடைப் போட்டியின் தூரம்50 கிலோ மீட்டர்களாகும். (கி)




# செல்வகௌரி வரதகுமார் ஆறுவது இடம்!

## 14.65 செக்கன்களில் ஓடிமுடித்தார்!

புதுடில்லி டிச. 2

இலங்கையின் 100 மீட்டர் தடைதாண்டி ஓட்ட சாதனையாளரான திருமதி செல்வகௌரி வரதகுமார், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆசியாட் '100 மீட்டர்கள் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் ஆறுதிடத்தையே பெற்றுக்கொண்டார்

இவர் தமது ஓட்டத்தை 14 65 செக்கன்களில நிறைவு செய்தார் இப்போட்டியில் எமி அகி மோட்டோ என்ற ஜப்பானியப் பெண் முதலாமிடத்தைப்பெற்றார்.

திருமதி செல்வகௌரி வரதகுமார் ஆறுவதிடத்தைப்பெற்றபோதிலும, அவர் ஓட்டத்தை நிறைவுசெய்த நரம் சிறந்த ஆசிய நிறைவு நேரங்களுடன் சேர்த்துக்கணிக்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையிருந்து கலநதுகொண்ட மெய்வல்லுநர்களில் திருமதி வரதகுமாரின் ஓட்டநேரமே குறிப்பிடத்தக்கதென்றும், இவரே இலங்கை மெய்வல்லுநர்களில் முன்னணியில் விளங்கிறரென்றும்தெரிவிககப்பட்டது. (கி)

## பாண்டியர்கால சின்னங்கள் கண்டுபிடிப்பு!

சென்னை, டிச 2

மதுரை மாவட்டத்திலுள்ள திருமாணிக்கம் என்ற இடத்துக்கருகில் பாண்டியர் கால வட்டெழுத்தும், கல்வெட்டொன்றும்; மதகு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை 1200 ஆண்டுகள் பழமையானவையென்றும் தெரிவிக்கப்பட்டது. இவ் அகழ்வுப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் பணியில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களான விஜயவேணு கோபன், வெங்கட்ராமன் ஆகியோர் ஈடுபட்டனர். (சி)

## சிறுவர் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

ஒழுக்கம், கட்டுப்பாடின்றி வெறும் அறிவை வளர்க்கும் கல்வி மனித முன்னேற்றத்திற்கு ஊறுவிளைவிக்கும்.

நல்லூர் சிவானந்த மாதர் சங்க பத்தாவது ஆண்டு சிறுவர் கலைவிழாவில் சங்க உப தலைவர் திருமதி க. சூரசங்கார ன் தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது குழந்தைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக்கும் முகமாக சச்சிதானந்த சிறுவர் சங்கம் என்ற பெயரில் சிறுவர்களுக்கென பாடசாலை ஒன்று நடத்தப்படுகிறது வாழ்க்கையில் வெறுப்புற்றுள்ள பெண்களுக்கு இச்சங்கம் தன்னாலான உதவிகளை செய்வதுடன், அவர்களின் வாழ்க்கையில்தன்னம்பிக்கையை ஊட்டுகிறது

சங்க பொருளாளர் திருமதி ப. ஜெகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். செல்வி ஜெயந்தி சுப்பிரமணியம் நன்றி கூறினார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (க)

"குடும்பநலத்திட்டம்:

# இனரீதியாகப் பாதிக்கும் என்ற கருத்து தப்பானது"

- யாழ். அரசாங்க அதிபர்.

(வவனியா)

''குடும்பத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதால் இனரீதியாக மக்களைப் பாதிக்கும் என்ற கருத்து தப்பானது. இலங்கையில் 150 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழும் பல்வேறு சமூகத்தினரது புள்ளிவிபரங்களையும் பார்க்கும் போது சனத்தொகை வளர்ச்சி ஒரே அளவில் இருப்பதையே காண முடிகிறது.'' என்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திசபை செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

வடபிராந்திய குடும்பநலத் தொண்டர் மகாநாட்டில்பேசுகையில் மேற்கண்டவாறு அவர் கூறினார்

இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தின் வடபிராந்தியத்தைச் சேர்ந்த யாழ், மன்னார், முல்லைத்தீவு, வவனியா குடும்பநலத் தொண்டர் வருடாந்த மகாநாடு வவனியா நகரசபை மண்டபத்தில் நடந்தது திரு. தேவநேசன் நேசையா மேலும் கூறியதாவது:

''எமது நாட்டில் உள்ள அனைவருமே சிறிய குடும்பங்களை விரும்புகின்றார்கள். குடும்பதிட்டத்தினை அறியாதவர்களே பெரிய குடும்பங்களாகவுள்ளனர் யாழ், மாவட்ட குடும்பநலத்திட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒருதனிப்பட்ட அலுவலகம் தேவை என்று கோரப்பட்டதாக அறிகின்றேன். இப்பகுதிக்கு ஒரு தனிபபட்ட அலுலகம் அமைக்க கச்சேரியில் இடம் தருவேன்.'

மகாநாட்டுக்கு வவனியா குடும்பநல மாவட்டத்தலைவர் திரு. ஆர். வி. வில்வராசா தலைமை வகித்தார். குடும்பநலத் தொண்டர்களின் ஊர்வலத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின,

குடும்பநலத் தொண்டர்கள் வவனியா நகரின் நாலாபக்கங்களிலிருந்தும் அலங்கார ஊர்வலத்துடன் கையில் குடும்பநல கொடிகளை ஏந்தியவண்ணம் நகரின் பிரதானவீதி வழியாக வந்து வவனியா பொலிஸ்நிலையச் சந்தியில் ஒன்றுகூடி யாழ். கண்டிவீதி வழியாக மகாநாட்டு மண்டபத்தை அடைந்தனர் ஊர்வலம் சுமார் 3 மணித்தியாலங்கள் நீடித்தது.

மன்னார் மாவட்ட குடும்பநலத்தலைவர் டாக்டர் ரொபேட் குரூஸ் தலைமையில் இந்தஊர்வலம் வந்தது ஊர்வலத்தில் சுமார் 200 குடும்பநலத் தொண்டர்கள் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது

ஊர்வலம் மகாநாட்டு மைதானத்தை வந்தடைந்து அணிவகுத்து நிற்க தொண்டர்களின் சேவைக்கு மதிப்பளிக்குமுகமாக தொண்டர்கள்மூலமாகவே தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. தேசியகீதமும், குடும்பநல கீதமும் இசைக்கப்பட்டது வவனியா மாவட்டக் கொடியும் குடும்பநலக் கொடியும் பறந்து கொண்டிருந்தன.

தொண்டர் மகாநாட்டின் நோக்கத்தினை வடபிராந்திய செயலாக்க முகாமையாளர் திரு. எஸ். கலா பரமேஸ்வரன் விளக்கினார். மன்னார் அரசாங்க அதிபர் திரு. செந்தில்நாதன் பேசுகையில் கூறியதாவது:

[7-ம் பக்கம் பார்க்க]

போக்லண்ட் தகராறு;

## பிரிட்டனும், ஆர்ஜன்டீனாவும் பேச்சுக்களை நடத்தவேண்டும்

- அதிபர் றீகன்.

லண்டன், டிச, 2

'போக்லண்ட்' தீவு சம்பந்தமாக பிரிட்டனும், ஆர்ஜன்டீனாவும் பேச்சுவார்த்தைகளை மீண்டும்நடத்த வேண்டுமென அமெரிக்க அதிபர் றீகன் தெரிவித்துள்ளார்.

தமது லத்தீன் அமெரிக்க விஜயத்தின் முதல் கட்டமாக பிரேஸில் வந்த திரு றீகன், பிரேஸில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருந்துபசாரமொன்றிலேயே இதனைத்தெரிவித்தார்.

திரு றொனல்ட்றீகன்மேலும் தமது உரையில், ஆர்ஜன்டீனா போக்லண்ட்தீவு விடயத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்தாது, இராணுவ பலம் கொண்டு தீர்வுகாண விளைந்தது தவறானதென்றும், அதனாலேயே அமெரிக்கா பிரிட்டனை ஆதரித்ததென்றும் கூறினார்.

பிரேஸில் ஜனாதிபதி பேசுகையில், மத்திய அமெரிக்காவில் நிலவும் பதட்ட நிலை குறித்து கவலை தெரிவித்தார். (கி)

# ஜனாதிபதி தேர்தல்: கெனடி போட்டியிடமாட்டார்

வாஷிங்டன், டிச. 2

1984ம் ஆண்டு நடைபெறவிருக்கும் அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று செனட்டர் எட்வேர்ட் கெனடி தெரிவித்துள்ளார்.

செனட்டர் கெனடி இது பற்றி மேலும்தெரிவிக்கையில் ததுன மனைவியிடமிருந்து எதிர்நோக்கும் விவாகரத்து காரணமாகவும், தமது குடும்ப நலனைமுன் னிட்டுமே இம்முடிவுக்கு தாம் வந்துள்ளதாகக் கூறினார்.

81ம் ஆண்டு தேர்தலில் போட்டியிடப்போவதில்லை யென அறிவித்திருக்கும்செனட்டர் கெனடி, 88ம் ஆண்டில் நடைபெறும் ஜனாதிபதித்தேர்தலில் அல்லது அதன் பின்னர் வரும் தேர்தலில் தாம் போட்டியிடுவாரென அறிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செனட்டர் கெனடி தீவிர போட்டியிட்டபோதிலும், ஜனநாயகக் கட்சிக்சான ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராவதில் தோல்விகண்டாரென்பது குறிப்பிடத்தக்கது [கி]

## போதைவஸ்து கடத்தல்: பாக். அரசு கடும்நடவடிக்கை!

இஸ்லாமாபாத். டிச 2

பாகிஸ்தானிலிருந்து நடைபெறும் போதைவஸ்து கடத்தலுக்கெதிராக இந்நாட்டு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுக்க விருக்கின்றது

இங்கிருந்து , 'ஹிரோய்ன்' என்றழைக்கப்படும் போதைவஸ்தே அதிகளவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் கடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்தே பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கைகளில் இறங்கவிருக்கின்றது.

தற்போது போதை வஸ்து கடத்தலுக்கெதிராக இருந்து வரும் சட்டங்களும் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன இது பற்றிய முடிவுகள் இன்னும் மூன்று வாரங்களில் தெரிவிக்கபபடுமென அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானிலிருந்து 'ஹிரோய்ன்' போதைவஸ்து தனது நாட்டுக்கு கடத்தப்படுவது குறித்து அமெரிக்காவும் கவலை தெரிவித்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

**மணிவாக்கு**

பச்சை பசுந்தமிழ் நாட்டில்—தமிழ்
பாய்ந்திட வாழ்வதே வாழ்வு
—பாரதியார்

# நமது நோக்கு

## ஒரு கூட்டில் இரு பறவைகள்

"வடக்கில் என்ன நடக்கிறது" என்று அமைச்சர் சிறில் மத்தியூ ஆவேசமாக ஒரு கேள்வியை பாராளுமன்றத்தில் எழுப்பினரென்றும், அதற்கு பதிலைத் தாமே அளித்தாரென்றும் எமது நிருபர் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். அமைச்சரின் ஆவேசப் பேச்சு அவருடைய கருத்தை பறித்துவிடும்

வடபகுதியில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் பட்டியல் போட்டு அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது அவசியம் என்று பிரதமர் பிரேமதாச தெளிவுபடுத்தினரென்பதும் அச் செய்தியில் இடம்பெற்றிருக்கிறது.

இவ்விரண்டுக்கும் 'சபாஷ்' சொல்லும் வகையில் தமிழ் அமைச்சர் தேவநாயகம் "வடக்கில் யாராவது மனித உரிமைகளை மதிக்கிறார்களா? என்று கேட்டிருக்கிறார் பரிதாபம் தொனிக்கும் உணர்வு அது.

தமிழ் அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வருவதுமிகக் குறைவென்பதற்கு இந்தத் தப்பபிப்பிராயமே காரணமென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. போதிய பாதுகாப்புடன் வரும் அமைச்சர்கள் அஞ்சுவது யாதொன்றுமில்லை

அரசை எதிர்த்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் செல்வாக்குப் பெற்றுள்ளது; இருப்பினும் வடபகுதியில் எவரும் அமைச்சராக ஆட்சியில் அங்கம் வகிக்கும் 'அபாய' வேலையில் ஈடுபடாததால், அதற்கேற்ற துணிவுடைய தமிழ் அமைச்சர்கள், இப் பகுதியைச் சந்தேகக் கண்கொண்டுபார்ப்பது இயல்பு; அதில் ஒரு பொல்லாப்புமில்லை.

அது அவ்வாருக, பொது ஜனவாக்கெடுப்புக்குறித்து, அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்யும் வேளையில், அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பது விரும்பத்தக்கதல்ல; அதனை நன்குணர்ந்த பிரதமர் பாராளுமன்றத்தில் நீண்ட உரை நிகழ்த்தி அதனை விளக்க வேண்டியிருந்தது.

வடக்கில் என்ன நடக்கிறது?' என்பதொரு பரிகாசமான கேள்வியல்ல.

அதனை நன்ருகப் புரிந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் வடக்குக்கு என்ன நடக்கிறது என்ற கேள்வியை மனதில் உருவாக்கி தமது விடையை பிரதமர் பாணியில் பட்டியல் இட்டது மிகப்பொருத்தமாயிருந்தது

வடக்கில் என்ன நடக்கிறது? பதில் "வடக்குக்கு என்ன நடக்கிறது? எனவே நாட்டில் அவசர காலம் இன்று அமுலாவதற்கு போதிய நியாயமில்லை.

"தெற்கில் என்ன நடக்கிறது" என்றொரு கேள்வியை எழுப்பி அதனவெறுமையை அம்பலப்படுத்த ஆளிருக்கவில்லை

இந்த வெற்றி நிலையில் அமைச்சர் சிறில் மத்தியூ ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சி பற்றியும் அதன் பேரில் நடைபெற்றதென்று சொல்லப்படும் அக்கிரமங்களையும் அவிழ்த்து விட்டிருக்கிறார்; பாபம் தனிமனிதனை திருலக்ஷ்மன் ஜெயக்கொடி அரசு மரப்பினரின் சண்டமாருதத்தை எதிர்த்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

ஒரு கட்சி ஆட்சி எவ்வாறிருக்குமென்பதைத் தெளிவாக்கும் முயற்சி போலும்!

வடக்கிலும் தெற்கிலும் நாட்டின் ஆட்சிக்கு ஆபத்திருக்கிறது வேண்டியபாதுகாப்பு அளிப்பது அரசின் அவசிய கடமையென்ற காரணத்தைக் காட்டி, அவசரகாலச் சட்டம் நீடிக்கப் பட்டுள்ளது.

ஆட்சிக்கும், ஆட்சியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் எதிர்ப்புக்காட்ட வரும், இரு கூட்டத்தினரையும் பயங்கரவாதிகளும் நக்ஸல் பாரிகளும் தடுப்புக்காவலில் வைக்கப்பட வேண்டியவர்களாய் விட்டனர் நாட்டின் அமைதிக்கு இது தவிர்க்க முடியாத நடவடிக்கை என்பது அரசின் கொள்கை.

இவ்வித குழப்பமற்ற பாராளுமன்ற மொன்றையே ஜனாதிபதி நாடுகிறார்; "இதனை ஆதரித்து விளக்குக்கு முன்பு புள்ளடி போடுங்கள்" என்ற பிரசாரம் நாட்டில் எங்கணும் நடைபெறுகின்றது.

வடக்கில் அரசு குறிப்பிடும் 'பயங்கரவாதம்' பல வருடங்களாக இருந்து வருகிறது; தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காலம் தொட்டு இவ்வித இயக்கம் உருவாகியிருக்கலாம்; அதற்குப் பின் பதவிக்கு வந்ததே இன்றைய ஆட்சி. இந்த இயக்கம் இன்றைய நெருக்கடி நிலைக்குக் காரணமில்லையென்பது வெள்ளிடை மலை.

இன்று "பொதுஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும், பொதுத் தேர்தல் நடத்துவதை விலக்கிக் கொள்ளவும் அரசுக்குக் கிடைத்த அன்பளிப்பு, ஜனாதிபதி தேர்தல் பின் நடைபெற்றதாகக் கூறப்படும் "சதி இயக்கம்"

இரண்டு வருடங்களுக்கு முன் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமைத் 'துகில்' உரியப்பட்டபோது உருவானதென்று சொல்லப்படும் 'சதியும்' பழங்கணக்காக இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"வடக்கில் நடக்கிறதும்: தெற்கில் நடக்கிறதும் திடமாக நிற்பாட்டப்படவேண்டியவை" என்ற மதிப்பீட்டின் மையத்தில் நடைபெறுகிறது பொதுஜன வாக்கெடுப்பு.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவில் நம்பிக்கை கொண்ட நாட்டுமக்கள், அவருடன் ஒத்துழைக்கக் கூடிய– இன்றைய– பாராளுமன்றத்தை உதவவேண்டுமானால் விளக்குக்கு நேரே புள்ளடி போடவேண்டுமென்று பத்திரிகைகளும், வானொலி, ரூபவாகினி போன்ற பொதுஜனத் தொடர்பு சாதனங்களும் முழங்குகின்றன! எதிர்நீச்சலுக்கு 'வேலையில்லைப்' போல் தெரிகிறது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணவேண்டிய நெருக்கடி நிலை எழுந்தகாரணமொன்றைக்காட்டி அமுல்படுத்தப்படும் அவசரகால ஆட்சி, அரசாங்கம் மீண்டும் ஆறு வருடம்தொடர உதவலாம். தகுந்த சந்தர்ப்பத்தை நழுவவிடவேண்டியதேன்?

'ஒரு கூட்டில் இருபறவைகள்' என்று வழங்கும் ஆங்கில வாசகம் இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

---

கருத்துச் சுதந்திரத்துக்குமாருன

# பத்திரிகை தடையை நீக்க மாநகரசபை கோரிக்கை

## கலாட்டா செய்த பார்வையாளர் பலவந்தமாக வெளியேற்றம்

(ஏ. வி. மாணிக்கம்)

[யாழ்ப்பாணம்]

அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கும், மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கும் சாவு மணி அடிப்பதுபோல், அவசரகாலச் சட்டத்தின்கீழ் சில பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை உடன் நீக்கிவிடவேண்டும்" என்று யாழ். மாநகராட்சிமன்ற மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு ஆ. துரைராஜசிங்கம் இப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு வி. கே. சிவஞானம் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதால், அன்றைய கூட்டத்துக்கும் பதில் ஆணையாளராக திரு. வ. திருநாவுக்கரசு கடமை ஆற்றினர்.

### பார்வையாளர் கலரியில் எழுந்த சத்தம்

மாநகரசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பார்வையாளர் கலரியிலிருந்த ஒருவர், உறுப்பினர் ஒருவரின் கவனத்தை ஈர்க்குமாப்போல் உரத்த சத்தமிட்டபோது, முதல்வர் அந்த நபரை பார்வையாளர் கலரியிலிருந்து அகற்றுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டார். அந்த நபர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கலரியிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்.

### 'பத்திரிகைத் தடையைநீக்குக'

சுதந்திரன் பத்திரிகைக்குத் தடைவிதித்திருப்பது பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் சாவுமணி அடிப்பது போலாகுமென்பதால் அரசியல் ரீதியான மாற்றுக் கருத்துக்களை நசுக்கி ஒடுக்கும் வகையில் சுதந்திரன் பத்திரிகைக்கு அவசரகாலச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டிருக்கும் தடையை உடன் நீக்குவதுடன் சுதந்திரமாக இயங்க அப்பத்திரிகையை அனுமதிக்க வேண்டும்" என்று ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்வதாக அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'சுதந்திரன்' பத்திரிகையுடன் மற்றும் சில பத்திரிகைகளையும் அரசு தடை செய்திருப்பதால் 'தடை செய்யப்பட்ட பத்திரிகைகளையும்" என்று மேற்படி பிரேரணையில் திருத்தம் செய்யவேண்டும் என தமிழ்க் காங்கிரஸ்அணி தலைவர் டாக்டர் ஏ எல்.ஏபிரகாமும், சட்டத்தரணி எஸ் செல்வராசாவும் கேட்டுக் கொண்டனர் இத்திருத்தத்துடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### நடைபாதை வியாபாரிகள் ஒதுக்கிடம்

"கொழும்பு நகரில் பிரதான வீதியின் நடு மையப்பகுதியே நடைபாதை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், பாவனையாளரின் நலன்கருதி யாழ். நகருக்கு அண்மித்துள்ள பொருத்தமான ஒரு இடத்தை அங்காடி வியாபாரிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் பிரேரணை கொண்டுவந்து திரு. எஸ்.தியாகராசா பேசினர்.

"நத்தார் பண்டிகைக்காலம் வருவதால் தீபாவளிப் பண்டிகைக்கு முன்னர் அங்காடிவியாபாரிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி தனியான ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட திரு தியாகராசா, நகரமக்களுக்கு நன்மையளிப்பதுடன், இங்குள்ள வர்த்தகர்களையும் பாதிக்காது என்று சொன்னர்

திரு என்.டி செல்லத்துரை இப்பிரேரணையை எதிர்த்துப் பேசினர்.

### நடைபாதை வியாபாரிகள் தொல்லை

"அங்காடி வியாபாரிகள் கொழும்பு, கண்டி போன்ற இடங்களிலிருந்தே பண்டிகைக் காலங்களில் இங்குவருகிருர்கள் என்றும் இதனுல் ஒருலட்சம், ஒன்றரை லட்சம் முதல் போட்டு வியாபாரம் செய்யும் நிரந்தர வர்த்தகர்கள் பெருமளவு பாதிக்கப்படுகிருர்கள் என்றும் கவலை தெரிவித்த திரு. செல்லத்துரை ரூ 90ஆயிரம் செலவுசெய்து பண்ணையில் அமைக்கப்பட்ட வெளியூர்களுக்கென செல்லும் பஸ் நிலையம் இன்று பாவனைக்கிலாத நிலையில் இருக்கிறது. இது சரிவர இயங்கியிருக்குமானல் சுகரமத்தியில் மினிபஸ்களின் நெருக்கடி இருந்திருக்காதென்றும் தெரிவித்தார்.

"அங்காடி வியாபாரிகள் பொதுமக்களுக்குப் பகட்டுக் காட்டி ஏமாற்றிப் பணத்தைக் கொண்டு செல்கிறார்கள். அவர்களை இங்கு வியாபாரம் செய்யவிடக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினர்.

திரு எஸ். தியாகராசாவின் பிரேரணையை ஏற்றுக் கொண்ட சபைத்தலைவர், அங்காடி வியாபாரிகளுக்கு தற்காலிகக் கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பது சம்பந்தமாக ஆறு பேர் கொண்ட குழுவைத் தெரிவுசெய்யும்படி சபையினரைக் கேட்டுக் கொண்டார்.

இக்குழுவில் திருவாளர்கள் எஸ் தியாகராசா, என்.டி, செல்லத்துரை எஸ், சீவரத்தினம், ஆ, துரைராஜசிங்கம், ஜனாப் மொகிதீன் பிச்சை, டாக்டர் ஏ, எல், ஏபிரகாம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர், இம்மாதம் 6-ம் திகதி இக்குழுவினர் அறிக்கையொன்றைத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது,

### நஷ்டஈடு வழக்கு வாபஸ்

யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலின்பாது எரிக்கப்பட்ட யாழ். மாநகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான கடை மற்றும் சந்தைக்கட்டிடம், நூலகக் கட்டிடம் ஆகியவற்றுக்கு நஷ்டஈடு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வாபஸ் பெறுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாகத் தலைவர் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றை வாசித்தார்.

"நஷ்டஈடாகக் கோரியது நூலகதனைத் தவிர்த்து 9,36,500 ரூபாவாகும், அவர்கள் எங்களது கோரிக்கையை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள். நூலகத்துக்கு 1,17,000.00 ரூபா. அதில் 9 லட்சம் ஜனாதிபதி தன்னுடைய நிதியிலிருந்து நஷ்டஈடாக அனுப்பியிருந்தார். இன்னும் மேலதிகத் தொகை

[5-ம் பக்கம் பார்க்க]

---

(பிள்ளையார் பெருங்கதையை முன்னிட்டு இத் தோத்திரம் வெளியாகிறது)

## விநாயகர் தோத்திரம்

ஓங்கார ரூபா போற்றி
ஓங்கொளி யானாய் போற்றி
நீங்காநல் லின்பே போற்றி
நிறைசுடர் உருவே போற்றி
தூங்கானை முகவா போற்றி
தூமறைச் சுடரே போற்றி
ஆங்காரந் தீர்ப்பாய் போற்றி

சங்கரன் மைந்தா போற்றி
தத்துவச் சுடரே போற்றி
பங்கய பாதா போற்றி
பழவினை தீர்ப்பாய் போற்றி
திங்களங் குளிர்வே போற்றி
தீங்கரும் பினியாய் போற்றி
அங்குச பாசா போற்றி
ஐங்கரா போற்றி போற்றி.

- ச. தங்கமாமயிலோன்

# "மனித சுதந்திரத்தைச் சூறையாடும் ஷரத்துக்களை நீக்குக" - யாழ். சட்டத்தரணிகள் ஜனாதிபதிக்குக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதச் சட்டத்தை மிகக் குறிப்பாக மக்களின் சுதந்திரத்தைச் சூறையாடும் வகையிலு நீதிமன்றங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலும் நிர்வாகத்திற்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியுள்ள ஷரத்துக்களை உடனடியாக நீக்குமாறு யாழ் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது

யாழ் நீதிமன்ற நூல் நிலையத்தில் யாழ் சட்டத்தரணிகள் சங்க விசேஷ கூட்டம் சங்கத்தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

யாழ் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் திரு ஆர். பாலசுப்பிரமணியம் கொண்டு வந்த மேற்கண்ட பிரேரணையைச் சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா வழிமொழிந்தார்.

தீர்மானத்தின் முழு விபரம் வருமாறு:

''இந்நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி பொலிசாரும் ஆயுதப் படையினரும் மக்களைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்து வரும் முறையை யாழ் சட்டத்தரணிகள் சங்கம் கலையுடன் அவதானித்து, வன்செயல் எக்கோணத்திலிருந்து யார் செய்தாலும் அதைக் கண்டிக்கும் அதே வேளையில், குறித்த பயங்கரவாதச் சட்டத்தையும் மிகக் குறிப்பாக மக்களின் சுதந்திரத்தைச் சூறையாடும் வகையிலும், நீதிமன்றங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலும் நிர்வாகத்திற்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியுள்ள 9, 10, 16, 17, 23-ம் ஷரத்துக்களை உடனடியாக நீக்கும்படியும் கோருகின்றது.

''அத்துடன் நிலைமையைக் கட்டுப்படுத்த ஏற்கனவேயிருந்த சாதாரண சட்டமான தண்டனைக்கோவைச் சட்டத்தின் ஷரத்துக்கள் போதுமானவையென்றும், எனவே அச்சாதாரண சட்டங்களுக்கு அமையவே தடுப்புக் காவலில் உள்ள சகலரும் நடத்தப்படவேண்டுமென்றும் ஜனாதிபதியையும் அமைச்சரையும் சங்கம் வேண்டுகிறது.''

சட்டத்தரணிகள் ஜிம்மி இராசரத்தினம், எஸ் ஸ்ரீநிவாசன், எஸ் சிவராஜசிங்கம், எஸ் லோகேஸ்வரன், எஸ் வல்லிபுரம் ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்

ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தின் பிரதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் அனுப்பப்பட்டது [க-அ]



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த நடன நிகழ்ச்சியின் போது 'அரஸ்கோ நர்த்தனாலய' அதிபர் 'நாட்டிய கலைமணி' செல்வி நளினி அரசரத்தினம் ஒரு அபிநயத் தோற்றத்தில் இப்படிக் காட்சி தருகிறார் சங்கரத்தை முருகமூர்த்தி ஆலய புனருத்தாரண நிதிக்காக இந்த நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

# "உண்ணாவிரதம் மூலம் எதிர்ப்பைக் காட்டலாம்"

## கிளிநொச்சி எம்.பி. கூறுகிறார்

(கிளிநொச்சி)

''தார்மீகம் பேசும் இன்றைய அரசாங்கம் சிறையில வாடும்-மக்களின் நன்மதிப்பை பெற்ற மதகுருமாரையோ, பல்கலைக்கழக விரிவுரையாளரையோ ஏனைய இளைஞர்களையோ விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகளால் எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை மட்டும் காட்ட முடியும்''

இவ்வாறு கிளிநொச்சிபுனித திரேசாள் ஆலயத்தில் மதகுருமார்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்மற்றும் இளைஞர்களையும்விடுவிக்க கோரி நடைபெற்ற உண்ணாவிரத வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி எம், பி திரு வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ் உண்ணாவிரத வைபவத்தில் திரு ஆனந்தசங்கரி எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் பேசும் மக்கள் இன்று பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். மக்களுக்கு தொண்டாற்ற தம்மை அர்ப்பணித்த மதகுருமார்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர், இளைஞர்கள் எவ்வித விசாரணையுமின்றி உள்ளனர்.

''உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்ற நடவடிக்கைகளால் இவர்கள் விடுதலை செய்யப்படுவர்கள் என நாம் எதிர்பார்க்கமுடியாது. நாம் எல்லோரும் வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்பட்டு எம பலமான எதிர்ப்புக்களை இன்றைய ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் இன்றைய உண்ணாவிரதத்துடன் எமது போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடக் கூடாது. மேலும் எமது போராட்டங்களை வலுப்படுத்தவேண்டும். மக்கள் மத்தியில் போராட்ட உணர்வை ஊட்ட வேண்டும்

''தமிழ் மக்களைப் பீடித்துள்ள கொடிய சாபக்கேடு நம்மிடையே வேறுபாடுகள் தோன்றுவது இன்றையதினம் இவ்வளவு தொகையாக சகல மதத்தினரும், இயக்கங்களும் ஒன்றுசேர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் இந் நிலை தொடரவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவைப் பிரதிநிதிகள் திரு எஸ் இராசபாலன், செல்வி எஸ், தேவமலர், சட்டத்தரணி எஸ். விக்னேஸ்வரன், மாணவர் ஒன்றிய அமைப்பாளர் திரு. ரி. தர்மானந்தசிவம், கிளிநொச்சி முருகன் ஆலய பிரதமகுரு இரத்தினேஸ்வரக்குருக்கள், கருகுல அதிபர் திரு. க. கதிரவேலு, திரு. பொ. விவேகானந்தன், வண பிதா ரி. மதுரநாயகம் உட்பட பலர் உரையாற்றினார்கள்,

# பத்திரிகை.:

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யான 11 லட்சம் ரூபா விடயமாக முதல்வர் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, அவருடைய சிபார்சும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

''மேற்படி தொகையும் ஜனாதிபதியிடமிருந்து கிடைத்தால் 20 லட்சம் ரூபா நூலகத்துக்கு நஷ்டஈடாக வரும். அவர்கள் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருக்கிற படியால், மிகுதித் தொகையும் கிடைக்கப்பெறலாம், எனவே வழக்குகளை தொடர்ந்து நடாத்த வேண்டிய அவசியம் இல்லை.''

## 'மினி பஸ்கள்' விஷயம்

யாழ் நகர மத்தியிலிருந்து, மினி பஸ்களை அகற்றி, அதற்கென தனியான ஒருஇடத்தை ஒதுக்குவது சம்பந்தமாகப் போக்குவரத்துக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனை, அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## மதகுருமார்

மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகள், மற்றும் இளைஞர்களை விடுதலை செய்யுமாறும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும்படியும் ஜனாதிபதி, பிரதமமந்திரி, எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணைகளை திரு ஆ துரைராஜசிங்கமும், திரு யோ செல்லநாயகமும் இணைந்து கொண்டு வந்தனர்.

இப்பிரேரணைகளை ஆதரித்து திருவாளர்கள் தம்பு கந்தையா, எஸ் சிறில், எஸ் பீரியல், ஏ யேசுதாசன், என் டி செல்லத்துரை, எஸ் செல்வராசா, டாக்டர் ஏ எல் ஏபிரகாம், ஜனுப் சாகுல் ஹமீட் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. (மா)

# தமிழ்ஈழ விடுதலை அணியும் கலந்து கொண்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தில் தமிழ் ஈழ விடுதலை அணியினரும் கலந்து கொண்டனர்.

யாழ். பெரிய கோவிலிலும், புனித. ஜேம்ஸ் தேவாலயத்திலும், நல்லூர் வீரமாகாளிஅம்மன்கோவிலிலும் நடைபெற்ற உண்ணாவிரதங்களிலும், மௌன ஊர்வலங்களிலும் தமிழ் ஈழவிடுதலை அணியைச் சேர்ந்த டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம், திரு. ஈழவேந்தன், திரு. பொன் பூலோகசிங்கம், திரு சுப்பிரமணியம் உட்பட விடுதலை அணியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் பங்கு கொண்டார்கள்.

காலைமுதல் மாலை வரை நடைபெற்ற உண்ணாவிரதத்திலும், பின் நடைபெற்ற மௌன ஊர்வலத்திலும் தமிழ் ஈழவிடுதலை அணியினர் தமது பங்களிப்பைச் செலுத்தினர்,

# "இறந்தவரின் இடதுபக்க மார்பிலிருந்து ஜயதிஸ்ஸ கத்தியை எடுத்ததைக்கண்டேன்"

## மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''சிநேகிதன் என்று வந்தீர்கள் இப்போது ஏன் கத்தியைக் காட்டுகிறீர்கள்? என்று சிங்களத்தில் நானும் சிவராதனும் கேட்டோம். அவர்கள் அதைக் கேட்காமல் முன்னேறினார்கள்'' என்று காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மேற்பார்வையாளர் திரு. ராஜ்குமாரின் மரணவிசாரணையில காங்கேசன்துறை தொழிற்சாலை முகாமை ஐயாத்துரை கணேசானந்தன் சாட்சிய மளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

''சந்தேகநபர்களை மின்வெளிச்சத்தில் கண்டேன் கத்தியை நீட்டிக்கொண்டு முன்னேறி வந்தார்கள் நானும் சிவராதனும் கேட்டோம். எனக்கு சிங்களம் பேசத்தெரியும். அப்போது ஜயதிஸ்ஸவைத்திருந்த கத்தி எனது இடது கையில் பட்டு ஒரு சிறு கீறல்காயம் ஏற்பட்டது. ராஜ்குமார் சாலைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டார். சந்தேக நபர்கள் கதவின் ஊடுகளுக்குள்ளால் அடித்தனர். ஜயதிஸ்ஸ யன்னல் ஊடாக சாலைக்குள் பாய்ந்தார்,

''நாங்கள் உள்ளே செல்ல முயல்கையில், விஜயரத்ன கத்தியைக் காட்டி எங்களை சிறிது நேரம் மறித்தார். பின்உள்ளே சென்றோம.

## கத்தியை எடுப்பதை...

'இறந்தவரின் இடதுபக்க மார்பிலிருந்து ஜயதிஸ்ஸ கத்தியை ஊடுருவி எடுப்பதைக் கண்டேன் பின் விழுந்துவிட்டார். இரத்தம் ஓடியது முருகதாஸ் ஈரத்துணியினால் காயத்தைப் பிடித்திருந்தார். நான் ஐயோ குத்திப் போட்டான் என்று கூறி 'அம்புலன்ஸ்' கொண்டுவரச் சொன்னேன்.

## சத்தம் போடவேண்டாம்

''விஜயரத்ன அப்போது கத்தியைகாட்டி சத்தம்போட வேண்டாம் எனப்பயமுறுத்தி விட்டு கட்டிலில் இருத்தினர்

''மோட்டார் சைக்கிள் ஸ்ராட் செய்யும் சத்தம்கேட்டது. 15 நிமிடத்தால் அம்புலன்ஸ் வந்தது. சந்தேக நபர்களை அப்போது காணவில்லை. இறந்தவருக்கும் சந்தேக நபருக்குமிடையில் தொழில் ரீதியில் தொடர்பில்லை.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசாரான ஐயாத்துரை, இராசராசா ஆகியோர் சமூகமளித்திருந்தனர். (க)

# தாக்குதல் வழக்கு: இராணுவத்தினர் விடுதலை

(மாவிட்டபுரம்)

தாக்குதல் வழக்கொன்றில் வழக்காளி தரப்பினர் சமூகமளிக்காமையால் எதிரிகளான இராணுவத்தினர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை புகையிரதநிலைய உதவி அதிபராகக் கடமை புரிந்த ஜயவீரபட்ட பந்திகே பிரேமதாஸ என்பவரை கடமையைச் செய்யவிடாது தடுத்து, சப்பாத்து காலால் தாக்கி, பலாத்காரம் பிரயோகித்ததாக பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த வி ஏ கே ரணசிங்கா, ஐ ஏ கருணதாஸ ஆகிய இரு ராணுவத்தினர்கள் மீது காங்கேசன்துறைப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

அச்சமயம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செல்வி மாலினி இராஜரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினம் இவ்வழக்கு கடந்த 3 தடவைகள் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டபோதும் வழக்காளிதரப்பினர் சமூகமளிக்கவில்லை. வழக்காளியான உதவி புகையிரத நிலைய அதிபர் காங்கேசன் துறையிலிருந்து இடமாற்றம் பெற்று சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே தொடர்ந்தும் தவணை போடாமல் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரினார்.

எதிரிகள் வீணாகப் பலமாதங்களாக தற்காலிக வேலை நீக்கத்திலிருந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற உண்ணுவிரதம்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மதகுருமார், விரிவுரையாளர், வைத்தியர், இளைஞர் ஆகியோர் கைது செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து கடந்த செவ்வாய்க்கிழமை கொட்டும் மழையில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை ஆலய வளவில் சுமார் ஆயிரம் பேர் உண்ணுவிரதமிருந்தனர்

இவ் உண்ணுவிரதத்தில் மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள் இளைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு' 'விடுதலையை முன்னெடுத்துச் செல்வோம்' 'தடுப்புக்காவலிலுள்ளவர்களை விடுதலைசெய்'போன்ற சுலோக அட்டைகளும் உண்ணுவிரதத்தின் போது வைக்கப்பட்டிருந்தது'

இந்த உண்ணுவிரதத்திற்கான ஏற்பாடுகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர்களும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் மேற்கொண்டிருந்தனர்.

## உரையாடினர்கள்!

நியுயோர்க், டிச 2

ஜப்பானின் புதிய பிரதமரான திரு நாகஸோனிசீனப்பிரதமர் திரு சாகோஸியாங்குடன் நேற்று தொலைபேசியில் உரையாடினர்

இவ்வுரையாடலின் போது சீன – ஜப்பான் உறவுகள் மேலும் பலப்படுத்த வேண்டுமென்பதில் ஜப்பானியப் பிரதமர் அதிக அக்கறை காட்டினரென்றும், சீனப் பிரதமர் ஜப்பானியப் பிரதமரின் இவ் அக்கறை குறித்து அவரைப் பாராட்டினரென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# இன்றைய பலன்

கார்த்திகை 17ம் திகதி

வெள்ளிக்கிழமை

(3—12—82)

மேடம்: நீண்ட நாள்கொடுக்கல் வாங்கல இன்று நிவர்த்தியாகும். சுற்றுடலில் மதிப்பு உயரும். பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்.

இடபம்; துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடம் உண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும். பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது,

மிதுனம்: இன்னலின் பின்னல் சோலைவத் தரலாம். வணிகத் துறையில் சமவருவாய்க்கு இடமுண்டு. விட்டுக்கொடுக்கு மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.

கடகம்: கனல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள், கவர்ச்சிகரமான உடை அணிவதற்கு விரும்புவீர்கள். ஆரம்பத்தல் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன் வருவார்கள்.

சிங்கம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள் நண்பர்களே சூழ்ச்சிவலை விரிப்பார்கள். பொறுமையைப் பேணி நடக்கவும்.

கன்னி: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு.

துலாம்: வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும்,

விருச்சிகம்: வெளியிடத்துப் பயணமேற்படலாம். உடல் நலத்தைப் பேணவும், பகை மூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும்.

தனு: உள்ளத்தில் உவகை கூத்து, உறவினர்கள் வருகை வாழ்க்கை நிரப்பியதாக இருக்கும். மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். எதிலும் தூய்மையைக் காண விரும்புவீர்கள்.

மகரம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரும் தன் கையே தனக்குதவி எனச் செயலாற்றவும். மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றியைத் தரும்.

கும்பம்: கவர்ச்சிகரமான தினம். சில விடயங்களால் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள். உள்ளத்தில் இடம் பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும்.

மீனம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கலாம். சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்க முடியும், வெளியிடத் தொடர்புகள் வளர்வதற்கும் இடமுண்டு.

சோதிடக்கலைநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை

[மாவிட்டபுரம்]


கீரிமலையையடுத்த வசந்தபுரத்தில் 3லட்சரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை எதிர்வரும் சனிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

வலி. வடக்குப் பகுதியில் வீணாக ஊற்றப்படும் கள்ளை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தும் நோக்கமாக தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் இந்தத் தொழிற்சாலையை அமைத்துள்ளது.

## வைத்தியசாலை தரமுயர்வு

[பண்டத்தரிப்பு]

காரைநகர் கிராமிய வைத்தியசாலை இம்மாதம் தொடக்கம் சுற்றயல் கூறு வைத்தியசாலையாக சுகாதார அமைச்சினால் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.


# உன்னத தரத்தின் உயர் சுவை-உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட் கட்டிப் பால்

மில்க்மெயிட அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள் உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

HTL CN 1103

**மில்க்மெயிட்** அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)
நேற்று இழுக்கப்பட்ட 133 – வது இலங்கை மகாஜன சம்பத் சுவீப் முதல் மூன்று முடிவுகள் வருமாறு :-

முதலாம் பரிசு
**11 G 0132**
ரூ, 2 07-970-00

இரண்டாம் பரிசு
**18 P 0312**
ரூ 1,24,782-00

மூன்றும் பரிசு
**20 K 0412**
ரூ, 41,594-00

தலா ரூ 891–30 சதம் ஆறுதல் பரிசுபெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு!

| | |
|---|---|
| 24 A 0054 | 02 B 0725 |
| 17 B 0857 | 25 B 0386 |
| 02 C 0802 | 04 C 0169 |
| 06 C 0681 | 17 C 0579 |
| 17 C 0959 | 19 C 0554 |
| 21 C 0099 | 21 C 0230 |
| 07 D 0225 | 20 D 0305 |
| 22 E 0917 | 10 E 0901 |
| 18 E 0630 | 19 E 0534 |
| 21 E 0396 | 21 E 0566 |
| 23 E 0709 | 25 E 0606 |
| 03 F 0951 | 04 F 0366 |
| 09 F 0675 | 15 F 0980 |
| 18 F 0769 | 03 G 0338 |
| 10 H 0880 | 12 H 08 0 |
| 19 H 0572 | 27 H 0935 |
| 02 J 0333 | 06 J 0945 |
| 07 J 0413 | 11 J 0664 |
| 19 J 0606 | 21 J 0417 |
| 24 J 0040 | 24 J 0713 |
| 05 K 0653 | 05 K 0775 |
| 07 K 0423 | 10 K 0198 |
| 11 K 0294 | 15 K 0008 |
| 01 L 0347 | 07 L 0353 |
| 08 L 0461 | 13 L 0598 |
| 18 L 0625 | 05 M 0086 |
| 08 M 0272 | 12 M 0155 |
| 17 M 0160 | 20 M 0971 |
| 20 M 0982 | 23 M 0872 |
| 01 O 0351 | 09 O 0416 |
| 10 O 0276 | 21 O 0818 |
| 02 P 0210 | 05 P 0261 |
| 10 P 0932 | 16 P 0252 |
| 03 Q 0053 | 04 Q 0569 |
| 18 Q 0650 | 16 Q 0260 |
| 18 Q 0759 | 25 Q 0946 |
| 13 R 0320 | 18 R 0217 |
| 20 R 0823 | 22 R 0200 |
| 25 R 0196 | 02 S 0777 |
| 03 S 0277 | 21 S 0928 |
| 24 S 0451 | 04 T 0384 |
| 20 T 0010 | 21 T 0385 |
| 23 U 0424 | 03 V 0935 |
| 16 V 0076 | 07 W 0034 |
| 08 W 0432 | 16 W 0377 |
| 19 W 0390 | 16 X 0100 |
| 01 Y 0560 | 02 Y 0360 |
| 10 Y 0853 | 13 Y 0410 |
| 25 Y 0025 | 03 Z 0068 |
| 15 Z 0854 | 18 Z 0672 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.


சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
3-வது வெற்றி வாரம்!
எம், ஜி ஆர்–லதா
நவரத்தினம்
A.P.N. இன் வண்ணப்படம்

றீகல் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்–ஜெயலலிதா
அசோகன்–நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
மனோகரா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி – கே ஆர். விஜயா
கிரகப் பிரவேசம்
(கலர்)

5-12-82 வரை
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6–30, 9–30
சனி, ஞாயிறு 2–30
பார்த்தால் பசிதீரும்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி–ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி தினசரி 10–30, 2–30, 6–00, 9–30
(யாழ். நகர்) சிவாஜி–உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவகுமார் - ஜெய்சித்ரா - ஜெயசுதா
வெள்ளிக்கிழமை விரதம் (கலர்)

ஸ்ரீதர் தினசரி 10–30, 4–30, 7–00, 9–30
(யாழ். நகர்)
Walt Disney's
PETE'S DRAGON
From 4-12-82 Bruce Lee in
WAY OF THE DRAGON


# "மக்கள் நன்மைக்காகவே
## ஆட்சியை நீடிக்க விரும்புகிறேன்"
### — ஜனாதிபதி.

[மன்னார்]
நான் ஹெலிகொப்டரில் வரும்போது மன்னாரைப் பார்க்கமுடியவில்லை அவ்வளவு பலமாக மழை பெய்து கொண்டிருந்தது இதனால் நான் யாழ்ப்பாணப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தேன் அதிர்ஷ்டவசமாக மன்னாருக்கு வந்துவிட்டேன் சில வாரங்களுக்குமுன் மன்னாருக்கு வந்திருந்தேன், அப்படி வந்ததால் தான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றேன். அதனால் தான் மீண்டும் மன்னாருக்கு வந்திருக்கிறேன்''.

மன்னாரில் நடைபெற்ற சர்வஜனவாக்கெடுப்புக்கு ஆதரவான பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னார் நாதன்ஸ் பட மாளிகை முன்பாக இக்கூட்டம் நடைபெற்றது

ஹெலிகொப்டரில் வந்து இறங்கிய ஜனாதிபதியை மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ கே. செந்தில்நாதன் மாலை சூட்டி வரவேற்றார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது;-

''வாக்குச்சீட்டில் விளக்குச் சின்னமே முதலில் இருக்கும். இச்சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டால் 89ம் ஆம் ஆண்டு வரை அரசின் ஆட்சிக் காலத்தை நீடிக்கமுடியும் ஆதலால் வாக்காளர்கள் விளக்குக்கு நேரே புள்ளடியிட வேண்டும். அப்படி விளக்குக்கு நேரே புள்ளடியிடாது விட்டால் அடுத்தவருடம் பொதுத் தேர்தலை நடத்தவேண்டும்

''கடந்த ஆட்சிக் காலத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும், கொல்வின் ஆர் டி சில்வாவும் மக்களின் அனுமதியின்றி ஆட்சிக்காலத்தை 2 வருடங்கள் நீடித்தனர். நாம் மக்களின் அனுமதியுடனேயே ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்காகவே சர்வஜன வாக்கெடுப்பை நடத்துகின்றோம்.

''வாக்களிக்கும் தினத்தில் மட்டும் ஒவ்வொரு வாக்காளரும் ஒவ்வொரு எம். பி யாக இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு தொலைபேசி, வாகனம், பிரயாணம் போன்றவற்றிற்கான வசதிகள் இருக்காது.

''இன்று பாராளுமன்றத்தில் ஐ தே கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களே பெரும்பான்மையாக அங்கம் வகிக்கின்றனர். மொத்தம் 143 பேர் அங்கம் வகிக்கின்றனர். இதன் மூலம் நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முயற்சிகள் எடுத்து வருகிறோம்

''மன்னார், வவனியா மாவட்டங்களில் பாரிய அபிவிருத்தித்திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக அறிகிறேன். இத்திட்டம் 50 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்மூலம் நீங்கள் கேட்ட உங்கள் தேவைகள் பூர்த்தியாகும்.

இத்திட்டங்கள மூலம் நீர்ப்பாசனம், தொலைபேசி, பாதைகள், மருத்துவவசதிகள் என்பன உட்பட சகல தேவைகளும் பூர்த்தியாகும்.

இதற்கான திட்டங்களை மன்னார் மாவட்ட அமைச்சரும், மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஜனாப் றவூப் ஆகியோரும் தயாரித்திருக்கின்றனர்

பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான ஆதரவு இல்லாவிட்டால் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள முடியாது. உறுதியான அரசாங்கத்தை நிறுவினால்தான் மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்யமுடியும்.

''நான் ஐ. தே. கட்சியின் அமைச்சரவையும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்

எனது விருப்பத்தை நிறைவேற்ற கடந்த ஜனாதிபதி தேர்தலில் எனக்கு வெற்றியைத் தேடித்தந்ததுபோல் சர்வஜன வாக்கெடுப்புக்கு வாக்காளர்கள் ஆதரவளித்து ஐ தே கட்சியின் ஆட்சிக்காலத்தை மேலும் 6 வருடங்கள் நீடிக்கச் செய்யவேண்டுமென விரும்புகிறேன் மக்களின் நன்மைக்காகவே ஐ தே. கட்சி அரசின் ஆட்சிக்காலத்தைநீடிக்க விரும்புகிறேன்: அரசின் ஆட்சிக் காலம் நீடிக்கப்பட்டால் உங்கள் எம். பி யும் தொடர்ந்து எம் பி. யாகவிருப்பார்.

''உங்கள் எம், பி தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்தவர். இதனால் எமக்குப்பிரயோசனமில்லை. அவர் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராகவே பிரசாரம் செய்து வருகிறார். அவரது பிரசாரத்தையும் நாம் பொருட்படுத்த வேண்டும

பொதுத்தேர்தல் வைக்கப்பட்டால் அவர் சில வேளை தோல்வியடையமுடியும். அதே வேளை ஐ தே கட்சி வேட்பாளர் வெற்றிபெறமுடியும். மன்னார் எம் பி. யோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எம் பி.க்களோ தமது எம் பி பதவியை ராஜினாமாச் செய்தால் அத்தொகுதிகளில் தேர்தல் நடத்தப்படும் பாராளுமன்ற உறுப்பினர் தொகையை 196 ஆக அதிகரிக்க ஆலோசனை செய்துவருகிறோம். பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை 196 ஆக அதிகரிக்கும்.

## இனரீதியாகப் பாதிக்கும்....

[3ம் பக்கத் தொடர்ச்சி]
'எதிர்பாராமல் பிள்ளைகள் பிறப்பதுபோல நான் எதிர்பாராமல் இங்கு பேசவந்துள்ளேன். இதுபோன்ற சம்பவங்கள் வாழ்க்கையில் ஏற்படக்கூடாது. அறிவறிந்து பிள்ளைகளைப்பெறவேண்டும், அதுவும் விரும்பிப் பெறுவதே தவிர விபத்தாக வரக்கூடாது'' என்றார்.

இலங்கை குடும்பத்திட்ட சங்க செயலாற்றுப் பணிப்பாளர் திரு. ஏ. திசநாயக்கா தனது உரையில்கூறியதாவது: ''குடும்பத்திட்ட சங்கம் தொண்டர்களுக்கு சிலசலுகைகளை அளிக்கவேண்டும் என்று வலியுறுத்துவது தப்பானது ஆகும். நாம் சர்வதேச திட்ட பெற்றோர் சம்மேளனத்தின் இலங்கை பிரதிநிதிகளாக உள்ளோம். எமக்கான செலவுகளுக்கு 95 வீதம் பணத்தை இவர்களே தந்துதவுகின்றார்கள். 160 நாடுகள் சர்வதேச திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனப் பிரிவில் அங்கம்வகிக்கின்றனர்.

தொண்டர்களின் சேவைக்கு நாம் மதிப்பளிக்கின்றோம், எமது தொண்டர்களில் 90 வீதமானவர்கள் இளைஞர்கள உள்ளனர். தொண்டர்களுக்கு அவர்களது சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பதும் எமது நோக்கமாகவுள்ளது. அத்துடன் தொண்டர்களுக்கு போதிய தகைமைகள் இருக்குமானால் அவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை பெற்றுக்கொடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்''. என்றார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் கலாநிதி எஸ். சிவஞானசுந்தரம் [நந்தி] பேசுகையில: ''தொண்டர் தம் பெருமை கூறவும் வேண்டுமா'' என்ற கூற்றைவிளக்கி எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் சேவை செய்யும் இவர்களது பெருமையை பலர் பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள்'' என்றார்.

வவனியா அரசஅதிபர் திரு. கே. கே. சி. லோகேஸ்வரன் கூறியதாவது: ''இன்று அனைத்துக் கட்சிகளுமே பாகுபாடு இன்றி இணைந்து இந்த நற்செய்தியை பரப்புகின்றனர்.

வவனியா மாவட்டத்துக்கு உலக வங்கி 37 கோடிரூபாவை அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ளது. ஐந்து வருடகாலத்துக்கு ஏற்ற திட்டங்களை நாம்வகுக்க வேண்டும். 240 லட்சம் ரூபாய் சுகாதாரப் பகுதியினருக்கு வழங்க உள்ளோம் இதில் கணிசமான அளவு குடும்பநல திட்டத்துக்கு செலவழிக்கப்படவுள்ளது'' என்றார்.

இலங்கை குடும்பத்திட்ட சங்க தலைமை அலுவலக தேசிய கிராமிய மட்டக்குழு உறுப்பினர் திரு. ஸ்டீபன் பெரேரா பேசுகையில் ''1979ம் ஆண்டு கிராமிய குடும்பநல திட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மட்டத்தில் சேவை வசதிகள் பரவலாக்கப்படவேண்டுமென பலரும் வலியுறுத்தியுள்ளனர். தொண்டர்களுக்கான சலுகைகள்பற்றியும் கூறப்பட்டுள்ளது, நான் 1959ம் ஆண்டு இதில் தொண்டராக சேர்ந்து இன்றுவரை 2? வருடங்கள்சேவைபுரிந்துள்ளேன் ஆனால் இதுவரை எந்த விதமான சலுகைபற்றியும சிந்தித்ததும் இல்லை, பெறவுமில்லை. இதேபோன்று நீங்களும் செயல்படவேண்டும்'' என்றார்

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் பரிசில்களை வழங்கினார் வவனியா குடும்பநல மாவட்ட உறுப்பினர் திரு. கோ. நடேசபிள்ளை நன்றியுரையுடன் மகாநாடு நிறைவுபெற்றது. இதனை அடுத்து வவனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் குதூகலக்குடும்பம் கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இதில் 'மாவீரன் பண்டாரவன்னியன்' நாட்டுக்கூத்தும் இடம்பெற்றது முல்லைத்தீவு குடும்பநல மாவட்டக்குழு இதனை செய்திருந்தது பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## பரிசளிப்பு விழா

(பண்டத்தரிப்பு
பண்டத்தரிப்பு ஜீந்தா வித்தியாலயப் பெற்றார் தின விழாவும், பரிசளிப்பு விழாவும் வரும் 7-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அருட்செல்வி மேரி கதீதரின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பி சண்முகராஜா, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு அல்ரன் இராசநாயகம் அடிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். பரிசில்களை திருமதி புஷ்பவதி சபாநாயகம் வழங்குவார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

# முகாமைக்கல்விமாணவருக்கு விஞ்ஞான மாணிப் பட்டம்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட முகாமைக்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் ஏற்கனவே யாழ் பல்கலைகழகத்தில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக செனட் விஞ்ஞானமாணிப் [வியாபார நிர்வாகம்] பட்டத்தை வழங்கத் தீர்மானித்துள்ளது.

முகாமைக் கல்விக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதால் தாமதமின்றி முகாமைக்கல்வி பயிற்சி நெறியை தொடர்வதற்கும் விஞ்ஞான மாணி [வியாபாரநிர்வாகம்] பட்டம் வழங்கவும் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் இம்மாணவர்கள் உடனே பதிவு செய்து பயிற்சி நெறியைத் தொடரலாம்.

## இப்படியும் நடக்கிறது

'பி. எல். ஒ எனப்படும் பாலஸ்தீன விடுதலை முன்னணிக்கு, அரபுநாடுளின் நிதிப்பங்களிப்பு எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா?

லிபியாவில் ஒவ்வொரு ஊழியரும் தனது ஒரு நாள் சம்பளத்தை அந்த விடுதலை இயக்கத்துக்கு அளிக்கின்றனர்.

அதாவது; ஒரு மாதத்தில் லிபியாவிலிருந்து நூற்று அறுபது கோடி ரூபா (இலங்கை நாணயம்) பாலஸ்தீன விடுதலை முன்னணியின் கைக்குச் சென்றடைகிறது!

இவ்விதமாக லிபியா மட்டுமல்ல; இருபது அரபுநாடுகள் அள்ளி வழங்குகின்றன!

'ஊடுருவி'

## பிரேத ஊர்வலத்தில் கைகலப்பு தவிர்க்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அரியாலை மேற்கைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர் ஒருவரின் பிரேத ஊர்வலத்தில் 'பாண்ட்வாத்தியம்' வாசித்துச் செல்லப்பட்டதைத் தடுத்து பாண்ட் வாத்தியத்தை வாசிக்காது அமைதியாகச் செல்லும்படி கோரிய ஒரு கோஷ்டியினருக்கும், பிரேத ஊர்வலத்தில் சென்றவர்களுக்குமிடையே ஏற்படவிருந்த கைகலப்பு அப்பகுதியைச் சேர்ந்த சிறுபான்மைத்தமிழர் சமூகத்தைச் சேர்ந்த சிலரின் தலையீட்டினால் கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி வீதியில் நடைபெற்றது.

பிரேத ஊர்வலம் கண்டி வீதி வழியாக அரியாலை சித்துப்பாத்தியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் திடீரென பொல்லுகளுடன் வந்த கோஷ்டியினர் பிரேத ஊர்வலத்தில் 'பாண்ட் வாத்தியத்தை' வாசிக்க வேண்டாமென்றும், தொடர்ந்தும் வாசித்தால் பயங்கர விளைவுகள் ஏற்படுமென்றும் எச்சரிக்கை விடுத்தனர். இதனைத்தொடர்ந்து இருகோஷ்டியினரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் பிரேத ஊர்வலம் சிறிதுநேரம் தடைப்பட்டது.

இருபகுதியினரிடையேயும் பிரதான வீதியில் கைகலப்பு ஆரம்பமாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதேநேரத்தில் அப்பகுதியைச் சேர்ந்த சிலரின் தலையீட்டினால் கைகலப்பு தவிர்க்கப்பட்டதுடன் இரு சமூகங்களிடையே ஏற்படவிருந்த சாதிச் சண்டையும் தவிர்க்கப்பட்டது அதனைத்தொடர்ந்து பிரேத ஊர்வலம் பாண்ட் வாத்தியத்துடன் மயானம்வரை நடைபெற்றது.

## பாதுகாப்பு--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக தகராறு இடம்பெற்று வருவதைச் சுட்டிக்காட்டியும், மேற்படி கொலைச்சம்பவங்களை சுட்டிக்காட்டியும் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை எம். பியும்எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கமும், தொழிலாளர் இயக்கங்களும் இக்கோரிக்கையை உயர்மட்டத்தில் விடுத்துள்ளனர்

மேற்படி கொலைச்சம்பவம் குறித்து மல்லாகம் பதில் நீதவான் திரு ஜி வி பாலசிங்கம் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர் சம்பவம் நடந்த 3 கட்டட உத்தியோகத்தர் விடுதியில் கதிரை, மேசைகள் சிதறியும், இரத்தக்கறைகள் பரவியும், உணவுப்பண்டங்கள் சிதறியும், யன்னல் ஒன்று உடைக்கப்பட்டும் கிடந்தது அவற்றை பதில் நீதிபதி அவதானித்துக் கொண்டார்.

பதில் நீதிபதியுடன் மல்லாகம் நீதிமன்ற முதலியார் திரு. எஸ். தெட்சணாமூர்த்தியும், காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சிவபாதமும் வந்திருந்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்தை பொலிசார் படம்பிடித்தனர்

கொலையுண்ட பொறியியலாளரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் நடந்தன அதில் சீமெந்து தொழிற்சாலை உயரதிகாரிகளும் தொழிலாளர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். தொழிற்சாலையிலும் தொழிற்சாலை வாகனங்களிலும் கறுப்புக்கொடிகள் பறந்தன

## மர்ம மனிதன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள துரவுக்குள் மயங்கிக்கிடக்கக் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தமர்ம மனிதனின் உடலில் தொட்டதும் ஊசிபோல் குத்துவதாகவும் கூறப்படுகிறது.

சாவகச்சேரி எம். பி. திரு வி என் நவரத்தினத்திற்கு அப்பகுதி மக்கள், இந்த மர்ம மனிதன்பற்றி புகார்செய்துள்ளனர் நேற்று பிடிக்கப்பட்ட மர்மமனிதனின்முகம் 'குரங்கு முக போல் காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட மர்ம மனிதன் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## லஞ்சப் புகார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கனகசபாபதி, ரி. சோமசுந்தரம், எஸ் யோகேஸ்வரன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானர். பொலிஸ் காப்பில் லஞ்ச பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் பிரிஸ் ஆஜரானர்.

சட்டஆதாரங்களை காட்டி சந்தேகநபரை பிணையில் விடுமாறு சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் வாதிட்டார். பிணையில் விடுவதற்கு இன்ஸ்பெக்டர் பீரிஸ் ஆட்சேபம் தெரிவித்தார்

சந்தேகநபரின் சகோதரன் பொறுப்பில் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் சிறைச்சாலைக்குள் செல்லக்கூடாதென்றும் 9-ம் தேதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பணித்தார். (க)

## ஜனாதிபதி விஜயம்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன நாளை மட்டக்களப்புக்கு விஜயம்செய்வார்.

அமைச்சர் திரு செ. இராசதுரை தலைமையில் நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பு பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றுவார்.

## பெற்றோருடன் செல்வதற்கு இளம்பெண் விருப்பம்

### வழக்கு தள்ளுபடி

[யாழ்ப்பாணம்]

யாழ், நீதவானின் உத்தரவின் பேரில் மானிப்பாயில் உள்ள கன்னியர்மடத்தில் அனுமதிக்கப்பட்டுக் காணமல் போன இளம் பெண்ணான ஜூலியானா பேர்ணி யாழ், நீதவான் திரு, ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜரானார்,

இப்பெண் காணாமல்போனதையடுத்து பிரதிவாதிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். தவராசா, காணாமல் போன பெண் அவரது பெற்றோரால் கடத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். நீதவான் பெற்றோரை டிசம்பர் 1-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்திருந்தார்

காணாமல்போன இப்பெண் இம்மாதம் 26-ம் தேதி சட்டத்தரணி ளான ஆர் ஈ தம்பிரத்தினம், ஜிம்மி இராசரத்தினம் ஆகியோர் மூலம் யாழ் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

தான் தமது பெற்றோருடன் செல்லவிரும்புவதாக இளம் பெண் நீதவனிடம் தெரிவித்தார்

மீண்டும் நேற்று முன்தினம் இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது இரு பகுதி வழக்கும் தள்ளுபடிசெய்யப்பட்டது (க)

## அமைச்சர் பார்வையிட்டார்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச் சோலைப்பகுதியிலுள்ள வயல்களில் உப்பு நீர் பிரவேசித்து வயல்களை மூடியிருப்பதால், சுமார் 2,000 ஏக்கர் பெரும்போக வேளாண்மை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆற்றோரங்களில் உள்ள விவசாய நிலங்களே இப்படிப் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரதேச அபிவிருத்தியமைச்சர் திரு. செ. இராசதுரை, பாதிக்கப்பட்ட இடங்களையும், வெள்ளம் பாதிக்கக் கூடிய இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

## நிவாரண உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவி வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.


## மரண அறிவித்தல்

கொழும்பு சட்டத்தரணி
அப்பாப்பிள்ளை சிவகுருநாதன்

கொழும்பு பிரபல சட்டத்தரணியும், ஆனைக்கோட்டை வாசியுமான அப்பாப்பிள்ளை சிவகுருநாதன் 2-12-82-ல் இறைவன் திருவடி சேர்ந்துவிட்டார். இவர் கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய ஆசிரியை இராசலட்சுமியின் அன்புக்கணவரும், சிதம்பரநாதன், இரத்தினம், நவரத்தினம் [பொதுமுகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி, மகேஸ்வரி (ஆசிரியை தாவடி மகேஸ்வரி வித்தியாசாலை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை [4-12-82] காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெறும்.

ஆலடி. குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

5354



★ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல

★ விமான டிக்கட்டுகள்
★ பிரயாண காசோலைகள்

(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

மக்கிறெேன்
டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154



★ எமது புதிய தொலைபேசி இலக்கங்கள்

22183- 22703

எஸ்.சின்னத்துரை அன் பிறதர்

39, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.